## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 245 OF 2024** |
| Deposition of witness | : | **PW - 3** |
| Name | : | **கோபாலகிருஷ்ணன்** |
| Father Name | : | **பரமசிவம்** |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | **38** |

**All accused present through hybrid mode**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 28.01.2025.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது உடுமலைப்பேட்டை ராகல்பாவியில் வசித்து வருகிறேன். நான் மணவறை அலங்காரம் வேலை செய்து வருகிறேன். கடந்த 20 9 2024 ஆம் தேதி நானும் என்னுடன் பணியாற்றும் கருமலைப்பனும் ராகல்பாவியிலிருந்து உடுமலைப்பேட்டைக்கு எனது இருசக்கர வாகனத்தில் சொந்த வேலை நிமித்தமாக சென்று கொண்டிருந்தோம். அப்போது ராகல்பாவி பிரிவுக்கு கிழபுரத்தில் கோவை தேசிய நெடுஞ்சாலை கணபதிபாளையம் பிரிவருகே காவல் ஆய்வாளர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தார். அவருடன் நான்கு போலீசார் இருந்தார்கள். நாங்கள் அங்கு செல்வதற்கு முன்பாகவே ஒரு ஸ்கார்பியோ கார், யமஹா ஆர் எக்ஸ் வாகனம், யமஹா crux வாகனம் மற்றும் வேறு சில வாகனங்களும் அங்க இருந்தது.

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2025.01.28 18:32:56 +05'30'

2. போலீசார் மேற்படி ஸ்கார்பியோ கார், யமஹா ஆர் எக்ஸ் வாகனம், யமஹா crux வாகனத்தில் வந்தவர்களை விசாரித்து கொண்டிருந்தார்கள். விசாரணையின் போது அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்து கொண்டு இருந்தார்கள். அதனால் போலீசருக்கு சந்தேகம் வந்து விசாரிக்க அந்த நபர்கள் நால்வரும் அவர்கள் உடுமலைப்பேட்டை, அவிநாசி, காங்கேயம், தாராபுரம் பல்வேறு பகுதிகளில் குற்ற சம்பவங்களில் ஈடுபட்டதாக கூறினார்கள். தற்சமயம் மதியம் சுமார் 12.15 மணி இருக்கும். என்னையும் எனது நண்பர் கருமலைப்பனையும் போலீசார் அழைத்து மேற்படி வாக்குமூலத்திற்கு சாட்சியாக இருக்கும் படி சொன்னார்கள். நாங்களும் சரி என்று ஒப்புக்கொண்டோம்.

3. விசாரணையின் போது அந்த நபர்கள் ஒவ்வொருவரும் தங்களது பெயர்களை கூறினார்கள். அவர்களது பெயர் முருகன் என்ற சிவகுரு, ராஜா, சுரேஷ் மற்றும் தங்கராசு. அவர்கள் கூட்டாக சேர்ந்து தான் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டார்கள். ஒவ்வொரு நபராக போலீசார் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். அதே இடத்தில் போலீசார் மடிக்கணினியை வைத்து அவர்கள் கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தை தட்டச்சு செய்து பென் டிரைவில் காப்பி செய்து உடுமலைப்பேட்டை சென்று பிரதி எடுத்த வந்தார்கள்.

4. முதலில் முருகன் என்கின்ற சிவகுருவிடம் ஒப்புதல் வாக்குமூலம் மதியம் சுமார் 12:30 மணி அளவில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக போலீசார் அவரை சோதனை செய்தபோது அவரது இடது பேண்ட் பாக்கெட்டில் இருந்து நகைகள் சிலவற்றை எடுத்தார்கள். அதில் காங்கயம் பகுதியில் திருடிய நாலரை பவுன் தங்க ஆரம், 4 ¼ பவுன் தங்க செயின் இருந்தது. சம்பவத்திற்கு பயன்படுத்திய கடப்பாறை, கம்பி ஆகியவற்றை ஆற்றில் வீசியதாக கூறியிருந்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என் நண்பரும் கையொப்பம் செய்தோம். தற்போது

என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அதன் தொடர்ச்சியாக போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சாட்சிக்கு மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சங்கதிகள் படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒத்துக் கொள்ளப்பட்டது.

5. எதிரி சிவகுருவிடம் ஒப்புதல் வாசல் மூலம் பெற்ற பின்பு எதிரி ராஜாவிடம் மதியம் 03.45 மணி அளவில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். ராஜா தான் பல்வேறு இடங்களில் திருடியதை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னிடமும் ராஜாவிடமும் கையொப்பம் வாங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக ராஜா எடுத்து ஆஜர் செய்த மூன்று பவுன் செயின், இரண்டு பவுன் தங்க பிரேஸ்லெட் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் போலீசார் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். பின்னர் இரவு சுமார் 07.15 மணியளவில் எதிரி சுரேஷிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக எதிரி சுரேஷ் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த தலா கால் பவுன் எடை கொண்ட இரண்டு ஜோடி தங்க காதனிகளை கைப்பற்றுதல் மகஜரில் போலீசார் கைப்பற்றினார்கள். அதற்கு சாட்சியாக நாங்கள் கையொப்பம் செய்தோம். **தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரிகள் சிவகுரு, ராஜா, சுரேஷ் மற்றும் தங்கராஜ் ஆகியோரது தனித்தனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள அ.சா.3 ன் கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.6 வரை குறியீடு செய்யப்படுகிறது).**

6. பின்னர் இரவு 10.00 மணி அளவில் எதிரி தங்கராஜிடம் போலீசார் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதில் நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். பின்னிட்டு போலீசார் கைது செய்த எதிரிகளை காவல் நிலையம் அழைத்துச் சென்றார்கள். நாங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் எங்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகளின் தரப்பில் நேராமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம் (FAC)